Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218 H, Kasthuriar Road,
JAFFNA;
T'phone: 23794

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி'
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

சுடர்: 4 சுக்கில ஆண்டு புரட்டாதி மீ 01 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 16 (17 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 245

# சகல தரப்பும் இணங்கினாலேயே யுத்த நிறுத்த அறிவிப்பு வரும்!

## பகிரங்கமாக அறிக்கை விடுமாறு எல்லாக் குழுக்களும் வலியுறுத்தப்படும்

கொழும்பு, செப்டம்பர் 17

வடக்கு, கிழக்கில் யுத்தநிறுத்த அறிவிப்பு வருவதாயின் அதற்கு இலங்கை அரசும், இந்திய அரசும் மட்டும் இணங்கினால் போதாது. வடக்கு, கிழக்கில் உள்ள முக்கிய தமிழ் குழுக்கள் அனைத்தும் அதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இணக்கம் தெரிவித்தால் மட்டுமே யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிடமுடியும்.

—இவ்வாறு இந்தியத் தரப்பில் தற்போது வலியுறுத்தப்பட்டு வருவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது,

எல்லாக் குழுக்களும் யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று, அதற்கு இணங்க செயற்படும் என உறுதியளிக்காத நிலையில் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிடுவது பயனற்றது என இந்தியத் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆகவே யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னர்—

அத்தகைய அறிவிப்பு வெளியானால் தாம் அந்த அறிவிப்புக்கு மதிப்பளித்து, அதற்கு இணங்க செயற்படுவோம் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் சம்பந்தப்பட்ட எல்லா தமிழ்க் குழுக்களும் பகிரங்க அறிக்கையை விடவேண்டும்—இவ்வாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்தகைய பகிரங்க அறிவிப்பை சகல தமிழ்க் குழுக்களையும் வெளியிடச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்பது குறித்து இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது, (உ)

### பெற்றோல், டீசல் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்; செப்: 17

வடபகுதியில் மீண்டும் பெற்றோலுக்கும் டீசலுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இவை போதிய அளவு கொழும்பில் இருந்து வராததும் இரு தினங்களாக சுழற்சி முறை மின்சாரம் இங்கு தடைப்பட்டதுமே தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்று நம்பப்படுகிறது.

தட்டுப்பாட்டைத் தொடர்ந்து யாழ். நகரில் தனியார் வர்த்தகர்கள் நேற்று எரிபொருள்களின் விலைகளைத் திடீரென உயர்த்தினர், (இ 10)

### துப்பாக்கி வேட்டு

வல்வெட்டித்துறை, செப் 17

பருத்தித்துறை, பொலிகண்டி, வியாபாரிமூலை போன்ற இடங்களில் நேற்று துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன, (இ-160)

### 4 தினங்களில் 100 அரச கட்டடங்கள் தீயில்

கொழும்பு, செப்; 17

தென்பகுதியில் அரசுக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்படுவது அதிகரித்து இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு தினங்களில் மட்டும் குறைந்தது நூறு அரசாங்கக் கட்டடங்கள் எரிக்கப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

### 2 இராணுவ வீரர்கள் கடத்தல்

கொழும்பு, செப்; 17

கொழும்பில் இரண்டு இராணுவ வீரர்களை இனந் தெரியாத நபர்கள் வாகனம் ஒன்றில் கடத்திச் சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கம்பஹா கிரிந்திவெலவுக்கு அருகில் இனந்தெரியாத நபர்களுக்கு உணவும், உறைவிடமும் அளித்தது என்ற புகாரின் பேரில் 15 பேர் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டனர். (இ-எ)

### வார இறுதி ரயில் சேவை நேர அட்டவணைப்படியே தினசரி ரயில் சேவையும்

யாழ்ப்பாணம், செப்17

கொழும்பு — யாழ் வார இறுதி ரயில் சேவை நடைபெறும் அதே நேர அட்டவணைப்படியே தினசரி ரயில் சேவையும் நடத்தப்படும்.

தினசரி ரயில் சேவை நடைபெறுவதற்கான அறிவித்தல் அநுராதபுரத்தில் இருந்து வானொலித் தொடர்பு மூலம் யாழ் ரயில் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டு உர்ஜிதப்படுத்தப்பட்டது.

திங்கட்கிழமை காலை கொழும்பில் இருந்து வழமையான நேரத்துக்கு இந்த ரயில் சேவை ஆரம்பிக்கும் என்று யாழ் ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

### பயணிகள் ரயில் சேவை சுன்னாகம் வரை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், செப் 17

கொழும்பு - யாழ். பயணிகள் ரயில் சேவையை சுன்னாகம் வரை விஸ்தரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமைதிப்படையினரின் பாதுகாப்பு அனுமதி கிடைத்தவுடன் இச்சேவை சுன்னாகம் வரை விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் - கொழும்பு ரயில் சேவையை நாளை முதல் தினசரி சேவையாக்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த சேவையையே சுன்னாகம் வரை விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப ரயில் சேவையை காங்கேசன் வரை நடத்தவே முதலில் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆயினும் தென்பகுதி அசம்பாவிதங்கள் காரணமாக ரயில் பாதைகளைத் திருத்துவதற்குத் தேவையான பொருட்கள் இங்கு வந்து சேரவில்லை.

இதனால் சுன்னாகத்திலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் பாதையைத் திருத்தும் வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன.

இதனால் ஆரம்பத்தில் பயணிகள் ரயில் சேவையை சுன்னாகம் வரை மட்டுமே விஸ்தரிப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (உ-9)

### அக்டோபர் முதல் வடக்கில் 6 ஆயிரம் குடும்பங்களுக்கு ஜனசக்திக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், செப் 17

யாழ். அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் உள்ள 6 ஆயிரம் குடும்பத்தினர் அக்டோபர் மாதம் முதல் 'ஜனசக்தி' கொடுப்பனவுகளைப் பெறுவர்.

இதற்கான 'ஜனசக்தி' சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்பட உள்ளன.

இந்தப் பத்திரங்கள் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டது ஆயினும் பத்திரங்கள் தயாரிக்கும் வேலைகள் இன்னும் முடிவடையாததை அடுத்து வேலைகள் தாமதப்பட்டு வந்தன.

ஆயினும் இம் மாத இறுதிக்குள் பத்திரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிடும் என்றும் அக்டோபர் முதல் சான்றிதழ்களைக் கொண்டு பொருள் கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

> சுபநேரம்
> 17 – 09 – 1989
> புரட்டாதி — 01
> ஞாயிற்றுக்கிழமை
> நக்ஷத்திரம்: ரேவதி
> சுபநேரம்:
> 09-03 முதல் 10-33 வரை
> ராகுகாலம்:
> 04-33 முதல் 06 03 வரை

### சுழற்சி முறை மின்சாரம் தடங்கல் இன்றிக் கிடைக்கும்

#### நேற்றும் ஹெவி டீசல் வந்தது

யாழ்ப்பாணம்; செப்: 17

சுன்னாகத்தில் இருந்து ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படும் சுழற்சி முறை மின்சாரம் இரண்டு தினங்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் வழங்கப்பட்டது.

இதே வேளை ஜெனரேட்டருக்குத் தேவையான 98 ஆயிரம் லீற்றர் ஹெவி டீசல் சுன்னாகத்துக்கு ரயில் மூலம் நேற்றும் கொண்டு செல்லப்பட்டது.

அதனை அடுத்து சுழற்சி முறை மின்சாரம் சில தினங்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் நேரங்களில் தொடர்ந்து கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. (இ-10)

### ஒரு தொகுதி மாணவர்கள் குறித்து இன்று முடிவு!

யாழ்ப்பாணம், செப் 17

பயிற்சிக்கென அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்களில் ஒரு தொகுதியினர் குறித்து இன்று முடிவு செய்யப்படும் எனத் தெரியவருகிறது.

ஒரு தொகுதி மாணவர்கள் இன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்கள் அடங்கிய குழு முன் நிறுத்தப்படுவர்.

அப்போது பிரஸ்தாப மாணவர்களிடம் அவர்கள் பயிற்சி பெறவிரும்புகின்றார்களா அல்லது கல்வியைத் தொடர விரும்புகின்றார்களா என்று சொந்த விருப்பம் கோரப்படும். அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் மாணவர்கள் விடுவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட மாணவர்களை பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் குழு எங்கு சந்திக்கும் என்பது குறித்து நேற்றிரவு வரை விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

இன்று காலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ. பி. ஆர். எல். எவ். அலுவலகத்தில் வைத்து பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் தம்மைச் சந்திப்பர் என்றும்—

அப்போது இடம் பற்றிய விவரம் தெரிவிக்கப்படும் என்றும் ஈ. பி. ஆர். எல். எவ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இன்று தாங்கள் ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கறுப்புப் பணம்; ரூ. 1,000 கோடி!

கொழும்பு, செப். 17

ஆண்டுதோறும் நாட்டின் புழக்கத்திற்கு வரும் கறுப்புப் பணத்தின் பெறுமதி சுமார் ஆயிரம் கோடி ரூபா என்று மக்கள் வங்கி தெரிவித்துள்ளது

இந்த கறுப்புப் பணத் தொகை அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் 25 சத விதமாகும் என்றும் மக்கள் வங்கியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### பூகம்பம்

மாஸ்கோ; செப்; 17

சோவியத்யூனியனில் நேற்று கடுமையான பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

அஸர்பைஜான் — ஆர்மேனியா மாநிலங்களை ஒட்டிய பகுதியில் இதுஇடம்பெற்றது. சேத விவரங்கள் வெளிவரவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## செய்திச் சாரம்

### இரணைமடு சந்தியில்

வட்டக்கச்சி, செப் 17

இரணைமடுச் சந்தி அமைதிப்படை முகாமிலிருந்து வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி அளவில் திடீர் என துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மோதல் சம்பவம் ஒன்றே காரணம் என்றும் இதில் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் உர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-163]

### ஜனாதிபதியை ரெலோ சந்திக்கும்

கொழும்பு, செப் 17

தமிழீழ விடுதலை இயக்கம் வருகிற 28 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து தனது யோசனைகளை சமர்ப்பிக்கவிருக்கிறது.

சமர்ப்பிக்க உள்ள யோசனைகள் குறித்து ரெலோ அமைப்பு அடுத்த வாரம் திருகோணமலையில் கூடி ஆராய இருப்பதாக ரெலோவின் அரசியல் ஆலோசகர் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா கொழும்பில் சொன்னார். (இ-எ)

### திரேஸா குணமடைகிறார்

புதுடில்லி, செப் 17

கடந்த 5 ஆம் திகதி புதுடில்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அன்னை திரேஸா தற்போது குணமடைந்து வருகிறார்.

இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த அன்னை திரேஸாவுக்கு பொருத்தப்பட்டிருந்த இயந்திர சாதனங்கள் தற்போது அகற்றப்பட்டுவிட்டன. (இ)

### சுவிஸில் மரணம்

வல்வெட்டித்துறை, செப் 17

வேலைவாய்ப்புத்தேடி சுவிற்ஸர்லாந்துக்குச் சென்றிருந்த வடபகுதி இளைஞர் ஒருவர் அங்கு கடந்த புதனன்று ரயிலில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

இமையாணனைச் சேர்ந்த ஆறுமுகம் குமார் (வயது 35) என்ற வாலிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (உ-160)

### முச்சந்தி முரளி



எங்கடை நாட்டு வரவு செலவுத் திட்டத்திலை துண்டு விழுகிற தொகையை விட கறுப்புப் பணம் கூடவாகத் தான் இருக்கும் போலை......!

## செய்திச் சாரம்

### இந்திய அதிகாரி வெளியேற்றம்

லண்டன்; செப்; 17

பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் தமது அந்தஸ்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தானை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஆயினும் கடந்த வாரத்தில் பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் புடில்லியிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு பழி வாங்கலாகவே இந்திய அதிகாரி வெளியேற்றப்பட்டார் என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [உ-9)

### ராஜினாமா

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. வி. எச். பிரேமச்சந்திர ராஜினாமாச் செய்துவிட்டார்.

இத்தகவலை கூட்டுத்தாபனப் பேச்சாளர் ஒருவர் வெளியிட்டார். (இ-எ)

### ஜே. வி. பி. அறிவிப்பு

கடந்த மே மாதம் முதல் இந்தியப் படையினருக்கு எதிராக தாம் மேற்கொண்ட தாக்குதல்களில் இதுவரை 63 இந்திய ஜவான்கள் கொல்லப்பட்டதாக ஜே. வி. பி. அறிவித்துள்ளது.

ஜே. வி. பி. யின் இந்த அறிவிப்பு மிகைப்படுத்தப்பட்டது என பி. பி. ஸி. கருத்துத் தெரிவித்தது. (உ-9)

### 14 தொழிற்சங்க அமைப்புகள் கோரிக்கை

நாடாளுமன்றத்தினுல் தெரிவு செய்யப்படும் இடைக்கால அரசு ஒன்றை நிறுவும்படி பதினான்கு தொழிற்சங்க அமைப்புகள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

ஜனாதிபதி முறைக்குப் பதிலாக பிரதமர் தலைமையிலான அரசு முறை மீண்டும் கொண்டு வரப்படவேண்டும் என்றும் இவை கோரிக்கை விடுத்து உள்ளன. (இ-எ)

### கண்டியில் 52 சடலங்கள்

கொழும்பு, செப் 17

கண்டிமாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களில் 52 சடலங்கள் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டன.

இச்சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

நேற்று 16 தீவிரவாதச் சந்தேக நபர்களும் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர், (உ-எ)

### சட்ட மறுப்புக்கு ஜே. வி. பி. கோரிக்கை

கொழும்பு, செப் 17

இலங்கை அரசிற்கு எதிராக சட்டமறுப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி தென்பகுதி மக்களிடம் ஜே வி. பி. இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசு சட்ட விரோத அரசு என்றும், அந்த அரசிற்கு வரிகள், பஸ், ரயில், கட்டணம் உட்பட எதனையும் செலுத்த வேண்டாம் எனவும் அந்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகக் அதிகரித்தள்ள நிலையில் மலிவாக Honda Raccoon சிவப்புநிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 2, அன்பகம், இராச வீதி, நல்லூர். (2351)

Sisil-R-80 குளிர்சாதனப் பெட்டி, கண்ணாடிமேசை, சிறிய அலுமாரி, Honda-ST-50 விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: R. நாதன் 39/4 கம்பன் ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (2370)

ஒன்றரை மாத வயதுடைய அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு தொடர்பு: (ஸ்ரீ முருகன் பேக்கறிக்கு அருகில்) ஆடியபாத வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (2185)

பாவித்த அலுமாரிகள் உட்பட சகல வீட்டுத்தளபாடங்கள் Fridge Gas-Cooker, T. V. மற்றும், மின் உபகரணங்கள் பித்தளை, சில்வர் பொருட்கள் மற்றும் பல விற்பனைக்குண்டு. Supeka 343. பருத்தித்துறை வீதி அரசடி, நல்லூர். (2141)

குபாட்டா லாண்மாஸ்ரர் பெட்டி, கலப்பை. இயர் பொக்ஸ் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல: 1 யாழ்வீதி, யாழ்ப்பாணம். (2164)

எம்மிடம் [illegible] வெளியிடப்பட்ட [illegible] நூல்கள் Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books). கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான முத்திரை மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மனோமோகன் ஏஜென்ட் (புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

வெலோ சொலெக்ஸ் Bicycle, Bantom சேவல், முட்டைபோடும் கோழிக்குஞ்சுகள், அடைமுட்டைகள் உண்டு; 249, பலாலி வீதி, கந்தர்மடம். (2178)

Honda Recondition C 70, C 50, C D 90, M D 90, haly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு: அன்ரன் என்ரபிறைசஸ், 390, பெயின் வீதி, சண்டிக்குளி, யாழ்ப்பாணம். (2183)

தமிழ் ரெமிங்டன் Godret, மற்றும் ஆங்கிலம் Optima, Olivetti, Remington Standards, Typewriters விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Fudo 39/17, மின்சாரநிலைய வீதி 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3685)

### காணி விற்பனைக்கு

மாவடி முனாய் ரேட்டிக் காளிகோயிலுக்கு அருகாமையில் உள்ள செல்லப்பா வள்ளியம்மையின் காணி 8 பரப்பும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு சி. மு. பரமலிங்கம் முன்கோடை, மூளாய். (2194)

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் அருகாமையில் வீடு கட்டக்கூடிய காணி 4 பரப்பு உடன் விற்பனைக்குண்டு; தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அ. மகாதேவன் செட்டிலிப்பாய் கோண்டாவில். (2369)

உடுவில் ஆர்க்லேனில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி கிணற்றுடனும் 10 அடி பாதையுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. தி மி நவரெட்ணம் இல: 19/2 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (2173)

### கோழிக்குஞ்சு விற்பனை

Hyline கறுப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சு, Golden Comet பிறவுண்பேடு, Prima புறொயிலர் 20-9-89இல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க: தொடர்பு:- A J. S Farm சண்டி வீதி, மிக்கவில், 21, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, நத்தமோட்டை. (2184)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broilers எல்லா வகையான இறைச்சிக் கோழிகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் Nallur Farm Centre முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். (2177)

### தேவை

விறகுசாலைக்குத் தேவையான பெரிய அளவிலான தராசு படிகளுடன் தேவை: தொடர்பு: சு. கமலானந்தன் 'நில்சந்தா' (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்) மானிப்பாய். (2372)

விவாகரத்துப் பெற்ற 53 வயதுநிரம்பிய பட்டதாரி ஆசிரியருக்கு 42 தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட மணப்பெண் தேவை: பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியை விரும்பத்தக்கது. விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். சாதி சமயம் கவனிக்கப்படமாட்டாது முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும் C/o 608, உதயன். (2362)

சோப் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை 20/3, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (2190)

புதிதாக ஆரம்பிக்கும் கம்பனியில் கணக்குகள் பார்ப்பதற்கு வர்த்தகத் தொழிலில் விருப்பமுள்ள 25 வயதிற்கு மேற்பட்ட படித்த பெண்கள் தேவை. கல்வித்தராதரம் எதிர்பார்க்கும் சம்பளம் அடங்கிய முழுவிபரங்களுடன் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்; 607. C/o உதயன். (2358)

சிறிய சில்லறைக் கடையில் வேலை பார்க்க அனுபவம் உள்ள ஆள் தேவை: வயது 45க்கு மேல் உள்ளவர் விரும்பத்தக்கது: நேரில் வரவும். செல்வராசா இல: 4 செட்டித்தெரு லேன், நல்லூர். (2174)

### மணமகன் தேவை

உயர் வேளாள இந்துப் பெற்றோர் 34 வயது 63'' திருக்கார்த்திகை நட்சத்திரம் உடைய BSc பட்டதாரி ஆசிரியைக்கு அதே தராதரம் உடைய (Professional) துணாராசி 38 வயதுக்கு உட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். முக்கிய விபரங்களுடன் குறிப்போடு முதல் கடிதத்திலேயே தொடர்பு கொள்ளவும்; வி. இல. 95. C/o உதயன், யாழ்ப்பாணம் (2189)

### தவறிவிட்டது

நல்லூர் திருவிழாவின் போது Over Seas Trust Bank Ltd கொழும்பில் ஒருலட்ச ரூபாவுக்கு பெறப்பட்ட வைப்புச் சான்றிதழ் (Certified Deposit Certificate) தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் விளம்பர இல. 94, மே/பா உதயன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2186)

ந. செல்லையா, பொ. சிவராசா, வை. ரோகிணி, ம. செந்தூரன் ஆகியவர்களின் உணவு முத்திரை 16-9-89 அன்று திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஊரெழு கிழக்கு R. V. G. Farm என்னும் விலாசத்துக்கு வெள்ளையம்மா கடையில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [2192]

அ. சிவராசா ஆகிய எனது கார்லைசென்ஸ் புத்தகம் ரயில்வே பென்சன்காட் தற்காலிக அடையாளஅட்டை என்பன நல்லூர் அரசடிக்கும் கல்யாண மண்டபத்துக்கும் இடையில் 15/9/89 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது 48, சோமசுந்தரம் அவென்யூ யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (2193)

### தவறிவிட்டது

C V அன்ரனது முக்கிய சில பத்திரங்களுடன் கூடிய பைல் ஒன்று சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் அல்லது (42/2 கோவில் வீதி ஒழுங்கை), ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2191)

### சேவை

கட்டிட வரைபடங்கள் மதிப்பீடு கட்டிட மேற்பார்வைகளுக்குத் தொடர்பு: 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (2149)

### TOEFL

Oct 28 Nob 18 Jan 18 Mar 10 May 18 பரீட்சைகளுக்கு மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றன தொடர்பு: S B. IYAR 12 வைமன் வீதி. (2171)

### SITUATION VACANT

Housekeeper and Companion. Applications Invited from English Educated lady in own handwriting with Photo. State age, Religion, Educational Qualifications, Civil condition, Preferable Healthy Spinster, fair, honest, Homely of Vellala family Attriactive terms. No 603, C/o Uthayan, Jaffna (2340)

### House For Sale

Two Bedroomed Ground Floor Flat with Tiled Bath rooms, Ceiling Fans in Colombo 05 Close to Schools and Market. Contact:- Advertiser, No: 34 BALAPOKUNE ROAD, KIRULAPANE COLOMBO 06

### அனுமதிப்பரீட்சை ஆண்டு 6

சென்ஜோன்ஸ் சுண்டிக்குளி அனுமதிப்பரீட்சையை முன்விட்டு மாதிரிப்பரீட்சை (ஆங்கிலம், தமிழ், கணிதம்) 24-09-89 ஞாயிறு 9, 30மணிக்கு நடைபெறும்; பதிவு செய்யவும் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் தோற்றலாம் நடந்தேறிய பரீட்சை வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம்: புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆண்பத்திரியடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (2367)

### வகுப்புகள் சிங்களம்/ஆங்கிலம்

அனுபவம் மிக்க லண்டன் பட்டதாரி ஆசிரியரால் ஆரம்பம் முதல் சிங்களம்/ ஆங்கிலம் க. பொ. த. வரை கற்பிக்கப்படும். வகுப்புக்கள் கொட்டடியில் நடைபெறும். விபரங்களுக்கு 46 பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (2166)

## இன்று நூல்வெளியீட்டு விழா

அச்சுவேலி, செப் 17

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்புல தலைவர் திரு. வி. ஆறுமுகம் எழுதிய 'வகுப்பறைக் கற்பித்தல்' நூல்வெளியீட்டுவிழா இன்று 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் நூல்வெளியீட்டுவிழாவில்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா வெளியீட்டுரையையும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அறிமுக உரையையும் ஆற்றவுள்ளனர்.

ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. ஆர். எஸ். நடராசா அறிமுக உரையையும், யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திரு. செ. ரியதம்பி வாழ்த்துரையும் ஆற்றவுள்ளனர்.

நூல்வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை கல்வியியற்புல கல்விக்கழகம் மேற்கொண்டுள்ளது. (2421)

வாகன உரிமையாளர்களுக்கு:

## ஒரு நற்செய்தி!

## புன்னாலைக்கட்டுவன் சேவிஸ்ரேசன்

மின்சாரம் இல்லாத போதும் ஜெனரேட்டர் மூலம் 60 நாட்களாகவேலை நடைபெறுகின்றது.

உரிமையாளர்

மு. வரதராசன்

(2378)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### தாமு கோவிந்தபிள்ளை

(வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயில் உரிமையாளரும் தர்மகர்த்தா சபைத் தலைவரும்)

தோற்றம்: 09 — 03 — 1906

மறைவு: 18 — 08 — 1989

ஐயா! எங்கள் கனவிலும் நனவிலும் உங்கள் தோற்றம், செயல்கள், தோன்றி மறைகின்றனவே பாசத்தின் உறைவிடமாய் இல்லத்தின் ஒளிவிளக்காய் திகழ்கின்ற என் அன்புத் தந்தையே தங்கள் பிரிவால் நிலை தடுமாறி நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் ஈமைக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் தகவல் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள்; மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தகவல்: திரு. வே. பாலசுப்பிரமணியம்,
நீலர்வளவு, தும்பளை,
பருத்தித்துறை. [2376]

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



### அமரர் விசுவலிங்கம் நடராஜா

[வர்த்தகர், பெரியகடை யாழ்ப்பாணம்]

தோற்றம்: 02 - 10 - 1919

மறைவு: 18 - 08 - 1989

நீங்கள் நடந்த பாதையின்
சுவடுகள் இன்னும் மறையவில்லை
உங்கள் குரல் ஒலி இன்னும்
காற்றினில் கலக்கவில்லை - ஆனால்
நீங்கள் எங்களைப் பிரிந்து
முப்பது நாட்கள் கழிந்தனவே!
முப்பத்தோராவது நாள் உமது
அஞ்சலிக்காக மலர்ந்தனவே!
உங்கள் நிழலில் நாம் வாழ் நாளெல்லாம்
வாழலாம் என நினைத்திருந்தோம் - ஆனால்
நீங்களோ நினைவுச் சுவட்டை மட்டும்
பதித்துச் சென்றீர்களே!!!

பிரிவால் வாடும்:
மனைவி நா. யோகரத்தினம்,
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
அண்ணையார்.

431, கஸ்தூரியார் வீதி, வட்டு. யாழ்ப்பாணம். (2374)

## வெல்டிங் பயிற்சி

வெல்டிங் பயிற்சி பயிலுவதற்கு 16 — 23 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

பயிற்சிக் காலம்: 4 மாதம்

மாதாந்தக் கட்டணம்: ரூபா 400/-

பெயர், வயது, விலாசம், கல்வித் தகைமைகள், விசேட தகைமைகள் போன்ற விபரங்களுடன் 23 - 9 - 89க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்;

இளைஞர் பயிற்சி நிலையம்,

பணிப்பாளர்,
வை. எம். சி. ஏ.
இளைஞர் நகர், பரந்தன். [2371]

## 3ஆம் மாத நினைவஞ்சலி



### அமரர் ஐயாராஜ் பர்ஞுந்து

மலர்வு: 19 — 03 — 1933

உதிர்வு: 17 — 06 — 1989

பண்பிற்கோர் இலக்கணமாய்
பாசத்திற்கோர் உறைவிடமாய்
உலகிற்கோர் உத்தமராய்
வீட்டிற்கோர் வித்தகனாய்
உற்றார், சுற்றத்தவர்க்கு சேவகனாய்

இல்லத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து மாதங்கள் மூன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாய் என்றும் ஒளிர்கிறது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
சகோதர சகோதரிகள், மாமா, மாமி,
மைத்துனர், மைத்துனிமார்.

82, கொலேஜ் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13 [சி-3688]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### குழந்தைவேலு நாகேந்திரம்

(சிவம்)

மலர்வு: 23 — 11 — 1963

### குழந்தைவேலு கெங்காபரமேஸ்வரன் (கெங்கா)

மலர்வு: 14 — 04 — 1966

உதிர்வு: 13 - 09 - 1987

திதி: 16 - 09 - 1989

மக்கள் உயிரைக் காக்கவென்று
சென்ற அண்ணன் உயிர் பிரிந்ததை
அறிந்த தம்பி உயிரும் உடன்
சென்றதை எண்ணி ஈராண்டென்ன
யுகம் சென்றாலும் மறக்க முடியாது வாடுகின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, சகோதரர்கள்
மற்றும் நண்பர்கள்

சிவாவத்தை,
முல்லைத்தீவு. [2188]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்:

பொருள்:
வறுமை என்று சொல்லப்படும் பாவி ஒருவனை நெருங்கினால், அவனுக்கு மறுமை இன்பமும் இம்மையின்பமும் இல்லாமற்போகும் நிலைமை வரும்.

உதயன்
இல. 392/3, நாவலர் வீதி, தொலைபேசி: 24000, 22078
யாழ்ப்பாணம்.
17 09 1989 — பெ. இல: 88

## இரண்டோடு மூன்றாக...

சிக்கனம், சேமிப்பு, முதலீடு — இந்த மூன்றினையும் எமது மக்கள் அவசியம் பழகிக் கொள்ளுதல் வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

இப்பகுதி வாழ் மக்கள், சிக்கனத்துக்குப் பெயர் பெற்றவர்கள் என்ற நிலைப்பாடு இருந்தது. உண்மை! சிக்கனத்துக்கு பிற பிரதேச மக்கள், வடக்குத் தமிழர்களை உதாரணமாக எடுத்துக் காட்டிய காலமும் இருந்தது.

ஆனால் அந்த நிலைமை இப்போது மாறி வருகிறது. சிக்கனத்தைப் பற்றி அக்கறைப்படும் தன்மை மெது மெதுவாகக் குறைந்து வருகிறது. உள்நாட்டில் இருந்து உழைப்பவர்களால் சிக்கனத்தை நினைத்துப் பார்க்க முடியாத நிலைமை; மாதச் சம்பளம் பெறுபவர்களும், அன்றாடம் கூலிகளும், விவசாயம் மற்றும் சிறு தொழில் செய்பவர்களும் வருமானம் போதாமல் கஷ்டப்படும் காலம் இது. விலைவாசிகள் உயர்வால், பணவீக்கத்தால் எவ்வளவு சம்பாதித்தாலும் மிச்சம் பிடிக்க முடியாத கஷ்டம். வருவாய்க்கு மேலாக கடன்படும் நிலையிலேயே உள்நாட்டில் உழைக்கும் பலரும் இருக்கிறார்கள்!

அதேவேளை, வெளிநாட்டில் உழைக்கும் எம்மவர் மூலம் கிடைக்கும் பணம் திட்டமிட்ட முறையில், பயன்தரத்தக்க வகையில் செலவிடப்படுவதில்லை. அது இலகுவாகக் கிடைக்கிறது என்பதால் வேண்டாத ஆடம்பரங்களுக்குச் செலவாகிறது. 'அடுத்தவன் செய்தால் நான் விடுவேனா?' என்ற போக்கில், போட்டி போட்டுக் கொண்டு வெளிநாட்டிலிருந்து வரும் பணம் ஆடம்பரங்களுக்கும், புதிதாகப் புகுத்தப்படும் டாம்பீகங்களுக்கும் செலவிடப்படுகின்றது!

இவை மட்டுமா? வெளிநாட்டுப் பணம், இங்கு எல்லாத் துறைகளிலும் போட்டியை உண்டாக்கி, உள்நாட்டில் உழைப்பவர்களின் செலவை உயர்த்தி, பலவிதங்களிலும் பாதிப்பை உண்டாக்க காரணியாக அமைந்திருக்கிறது. சீதனச் சந்தை, காணிச் சந்தை என்பனவற்றை வெளிநாட்டுப் பணம் வானளாவ உயர்த்தியிருப்பது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளுக்குச் சிறு உதாரணங்கள்.

மொத்தத்தில் நன்மை பயக்க வேண்டிய வெளிநாட்டுச் செலாவணி, தமிழ்ப் பகுதிகளில் வேண்டாத போட்டிகளையும், விலை உயர்வுகளையும், செலவு வகைகளையும் பெருக்கியுள்ளது. அதனால், ஆகக் குறைந்தது வீட்டுக்கு ஒருவரேனும் வெளிநாட்டில் இருந்து உழைத்து அனுப்பினாலும், அது எமது சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் உதவவில்லை என்பது கவலைக்கு உரியது.

ஆகையால் எமது மக்கள் சிக்கனத்தை மீண்டும் பழகிக் கொள்ள வேண்டிய தேவை உருவாகி இருக்கிறது. எமது சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அதுவே அடி அத்திவாரமாகவும் அமைய வேண்டும். வேண்டாத செலவுகளைத் தவிர்த்தும், உள்ளது எவ்வளவு குறைவானாலும் அதிலும் செலவை ஒறுத்துச் சிக்கனமாக வாழப் பழக வேண்டும்.

அந்தச் சிக்கனம் சேமிப்பாக மாறுவதும் அவசியம். சிக்கனப்படுத்திய பணத்தைக் கையில் வைத்திருந்தால் அது எப்படியும் செலவாகிவிடும். ஆகையால் சேமிப்பு அத்தியாவசியமாகிறது. அதாவது சிக்கனமும் சேமிப்பும் ஒன்றோடு மற்றது பின்னிப் பிணைந்தவை. 'சிக்கனம் இல்லாமல் சேமிப்பு இல்லை'; சேமிக்காவிட்டால் சிக்கனம் பயன்தராது.

சிக்கனப்படுத்திச் சேமித்ததை மீண்டும் சொந்தத் தேவைக்குப் பயனாக்குவதே எமது மக்களின் பழக்கமாக உள்ளது. அது தனிநலம் பேணுவது. சிக்கனப்படுத்திச் சேமித்ததை மூலதனமாக்கி, சிறுதொழிலகங்களை ஆரம்பித்தால் அதன் மூலம் பலருக்கு வேலைவசதி உண்டாகும். தொழிலகங்களைச் சரிவர நிர்வகித்தால் லாபம் அடைந்து மூலதனமிட்ட பணம் பெருகவும் வாய்ப்பு ஏற்படும். சிக்கனத்தின் பெறுபேறு சமூகநலம் பேணுவதாக அமைந்து பிரதேசத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும்.

சிக்கனம் சேமிப்பாக மாறும்போது அது தனிநலத்துக்கு அதிக அளவிலும், பொது நலத்துக்குக் குறைந்த அளவிலும் உதவுகிறது. சேமிப்பு மூலதனமாக மலரும்போது அது பொதுநலத்துக்கும், தனிநலத்துக்கும் துணைபுரியும்.

ஆகையால் சிக்கனம் சேமிப்புப் பழக்கங்களுடன் மூலதனமிடுவதையும் பழகி வருங்காலச் சந்ததியினரின் வளத்துக்கு அத்திவாரம் இடுவோமாக. இரண்டுடன் மூன்றாவதையும் சேர்த்துப் பயில்வோமாக.

## உடவளவை நீர்த்திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

உடவளவை நீர்த்தேக்கத் திட்ட வேலைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 1 கோடி 30 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் உடவளவை அபிவிருத்திப் பகுதியில் சுமார் 12 ஆயிரம் ஹெக்டெயர் காணிக்கு நீர்ப்பாசனம் வழங்கப்படும் என்றும்,

இதனால் இந்தப்பகுதியில் வாழும் குடும்பங்கள் இரண்டு போகங்களிலும் நெற்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும்,

இந்தத் திட்டத்தின் கீழ் உடவளவை நீர்த்தேக்கத்தில் இருந்து சந்திரிக்கா வாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் கால்வாய் திருத்தப்படும் என்றும்,

ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

## மென்ரக தொழில் வாய்ப்புகளுக்கு கடன்பெற தொண்டர் நிறுவனங்கள் தயக்கம்

### மீளச் செலுத்துவதில் சிக்கல் ஏற்படலாம் என்று அச்சம்

யாழ்ப்பாணம் செப். 17

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் மென்ரக தொழில்வாய்ப்புக்குரிய கடன்களைப் பெற்றுக் கொள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பல தயக்கம் காட்டி வருகின்றன.

தொழில் நுட்பப் பயிற்சிகளை முடித்த நிலையில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு கடன் வசதி அளிக்க முன் வந்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் நிறுவனத்துக்கும் மென்ரக தொழில் திட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒருலட்சம் ரூபா வழங்கப்படும்.

அந்தத் தொகையை தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 20 பேருக்கு வழங்கவும், அதனைக் கொண்டு தாம்பயிற்சி பெற்ற துறையில் அவர்கள் சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் வழி செய்யப்பட்டிருந்தது.

ஒரு தொண்டர் ஸ்தாபனத்துக்கு பத்து திட்டங்கள் வரை தொடங்கப் பத்து லட்சம்ரூபா வரைகடன் வழங்க ஏற்பாடு உண்டு.

ஒரு மென்ரக தொழில் திட்டத்திற்கு வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபா கடனைப்பெற்று வழங்கினால், மீண்டும் உரியவர்களிடமிருந்து இந்த பணத்தை அறவிட்டுக்கொடுப்பதில் சிக்கலை எதிர் நோக்க வேண்டி வரலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அரச சார்பற்ற தொண்டர், நிறுவனங்கள் பல அதனைப் பெற தயக்கம் காட்டி வருகின்றன.

இதன் காரணமாக 88ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினால் பயிற்சியளிக்கப்பட்ட 1025 பேர் பயிற்சி முடிந்தும், தொழில்கள் அற்ற நிலையில் இருக்கின்றனராம். (இ - 9)

## வவுனியா நகரப்பகுதிக்கு ஜெனரேட்டர் மின்சாரம்

வவுனியா, செப். 17

வவுனியா நகரப்பகுதிக்குக் கடந்த புதன்கிழமை முதல் ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக இது இருந்த போதிலும் வவுனியா நகரின் உற்பத்தி மற்றும் வர்த்தகத் தேவைகள் இதன் மூலம் பூர்த்திசெய்யப்படும் என்று நம்பப்படுகின்றது.

வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளரும், இப்பகுதி மின்சார சபையினரும் மேற்கொண்ட முயற்சிகளினாலேயே இந்த மின்சார விநியோகம் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள அரிசி ஆலைகள் முதலியவற்றுக்கும் விரைவில் மின்சாரம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த - 164)

## பாதுகாப்பற்ற நிலைமையில் கிளிநொச்சி நூல்நிலையம்

கிளிநொச்சி, செப் 17

கிளிநொச்சி பொது நூல்நிலையம் கடந்த சில மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள பல பெறுமதியான புத்தகங்கள் சேதமடையக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

நூல் நிலையக் கட்டடத்தின் மேல் கூரையில் உள்ள சீற்றுகள் உடைந்து காணப்படுகின்றன. இதனால் மழைநீர் உள்ளே வரக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கட்டடத்தின் உட்பகுதியில் கறையான் புற்றுகள் தோன்றி புத்தகங்கள் சேதமடைந்துள்ளன.

நூல் நிலைய கட்டடம் பாதுகாப்பற்றதாக உள்ளதாகவும் இந்த பகுதியில் அடிக்கடி ஏற்படும் அசம்பாவிதங்கள் காரணமாகவும் நூல் நிலையம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே இந்த நூல் நிலையத்தை வேறு கட்டடத்துக்கு மாற்றுவதன் மூலம் நூல்களும்பாதுகாக்கப்பட்டுவாசகர்களுக்கும் நூல்நிலையம் தனது சேவையை தொடரலாம் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (க-76)

## போக்குவரத்துக் கஷ்டத்தால் பொருள்களின் விலை ஏற்றம்

சேமமடு, செப் 17

சேமமடுப் பகுதிக்கும், கல்மடுப்பகுதிக்கும் நடைபெற்று வந்த தனியார், இ. போ. ச. சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இவ்விடங்களில் கடை நடாத்துவோர் மாட்டு வண்டிகளில் தான் பொருட்களை எடுத்துச் செல்கின்றார்கள்.

இதனால் இப்பகுதியில் பொருட்களின் விலை உச்ச நிலையை அடைந்துள்ளது. ஒரு கிலோ மா ரூபா 11 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இது இவ்விதம் இருக்க சேமமடுவுக்குப் போக்குவரவு வசதிகள் இல்லாமையால் தமது விவசாயப் பொருட்களை வவுனியாவுக்குக் கொண்டுவர முடியாது சேமமடு, கல்மடு மக்கள் மிகுந்த கஷ்டம் அடைகின்றனர். (க-37)

## சேமமடுக்குளத்தில் நண்ணீர் இல்லை: கால் நடைகள் அழியும் அபாயம்

சேமமடு, செப் 17

சேமமடுக் குளத்தில் தண்ணீர் வற்றிக் கொண்டு போகிறது. இட்டத்தட்டக் குளத்தில் அரை அடி தண்ணீரே இருக்கின்றது. இதனால் 600 ஏக்கரில் விவசாயம் செய்துவந்த 200 குடும்பங்கள் சேமமடுவில் பாதிப்படைந்துள்ளன.

தொடர்ந்து கடும் வரட்சி ஏற்படுமாயின் கால்நடைகள் கூட மடிந்துவிடுமென மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (இ-37)

## காங்கேசன் - தெல்லிப்பழை புனரமைப்புக்கு 17 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், செப். 17

காங்கேசன்துறை, தெல்லிப்பழை ஆகிய இடங்களை புனரமைப்பதற்கு 17 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூறை அமைச்சு ஒதுக்க உள்ளது.

காங்கேசன் துறை வீதிகளை புனரமைக்க 4 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவும், அரச கட்டிடங்களை புனரமைக்க 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்படும்.

தெல்லிப்பழை வீதிகளைத் திருத்த 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் அரச கட்டிடங்களை புனரமைக்க 1 லட்சத்து 91 ஆயிரத்து 800 ரூபாவும் ஒதுக்கப்படும்.

இந்தப் பணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக பிரதேச சபைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

யாழ் - மாவட்ட அரசியல் இணைப்பாளர் அலுவலக தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த - 9)

## சுயதொழில் கடன்

நெடுந்தீவு, செப். 17

யாழ். மறைமாவட்டத்தினால் சுயதொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட கடன் உதவித் தொகையை நெடுந்தீவில் உள்ள சுமார் ஐம்பது குடும்பங்கள் பெற்றுக்கொண்டன. (த- 14)

## வவுனியா, மன்னார், முல்லைத்தீவில் கட்டாக்காலி விசர் நாய் தொல்லைதினமும் அதிகரிப்பு

வவுனியா, செப். 17

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் கட்டாக்காலி நாய்கள், விசர் நாய்களின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழனன்று மட்டும் இவ்வாறான நாய்களின் கடிக்கு ஆளாகிய இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக வவுனியா அரசினர் வைத்தியசாலைக்கு வந்திருந்தார்கள்.

நீர் நிலைகள் வற்றி குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அளவுக்கு கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனாலேயே நாய்கள் கட்டாக்காலிகளாகவும், விசர் நாய்களாகவும் அலைய நேரிட்டுள்ளதாகத் தெரிகிறது.

விசர் நாய்க்கடி நோய்க்குரிய தடுப்பூசி மருந்துக்கு நிலவிய தட்டுப்பாடு இப்போது ஓரளவு நீங்கியுள்ளது.

எனினும் விசர்நாய்களையும் கட்டாக்காலி நாய்களையும் அழிப்பதற்குரிய ஆக்கபூர்வ நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிட்டால் இந்த மூன்று மாவட்டங்களிலும் உள்ளவர்கள் மேலும் மோசமான பாதிப்புக்கு உள்ளாக நேரிடும் என்று எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. (க-164)

## தெல்லிப்பழை வர்த்தகர்கள் இருவர் விசாரணையில்

வவுனியா, செப். 17

கடந்த வியாழனன்று மாலை வவுனியா நகரத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரும், அவரது மகனும் மற்றுமொரு வர்த்தகரும் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

இவ்வர்த்தகர்களின் லொறி வீடுகள் என்பனவற்றில் இருந்து சந்தேகத்திற்கிடமான பொருகள் படையினரால் கைப்பற்றப்பட்டதை அடுத்தே தந்தையும், மகனும் மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-164)

## சமய சந்நிதிகளில்

### சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் செப். 17

அராலி கரைப்பிட்டி விநாயகராலயத்தில் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகப் பூர்த்தியும் சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்க சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச்சொற்பொழிவு ஆற்றுவார்.

கோவிந்தசாமியின் புதல்வர்கள், சுந்தரமூர்த்தி குழுவினர், காரைநகர் [illegible] நாதன் குழுவினர் ஆகியோரின் நாதஸ்வர [illegible] பெறும். (க)

## மேலும் பத்துலட்சம்பேருக்கு உணவு முத்திரை கிடைக்கும்

### இவர்கள் விடுபட்டவர்கள்

கொழும்பு, செப். 17

உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதியிருந்தும் இது வரை அவை கிடைக்காத 10 லட்சத்து 65 ஆயிரத்து 385 பேருக்கு உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளது.

பதில் தொழில், சமூக சேமநல அமைச்சர் திருமதி சமந்தா கருணாரத்தின இதற்கான தீர்மானத்தை எடுத்திருக்கிறார்.

இது சம்பந்தமாக மீளாய்வு நடத்தும்படி அமைச்சர் ஏற் [illegible] தப்பட்ட ஆய்வின்படி, தகுதி இருந்தும் உணவுமுத்திரை கிடைக்காதவர்கள் 10, 65 385 பேர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. (உ-எ)

## "விருட்சம்" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப் 17

யாழ் பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின் வருடாந்த வெளியீடான விருட்சத்தின் வெளியீட்டு விழா நாளை 18ஆம் திகதி திங்கட்கிழமை கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும். (க)

## திருமுகம்

### நிவாரணமும் தீவுப்பகுதியும்

கடந்த கால வன்செயல்களால் தீவுப் பகுதிமக்கள் பரவலாகப் பல விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயம், மீன்பிடித் தொழில், கூலித்தொழில் போன்றவற்றில் பாதிக்கப்பட்டோர் ஏராளம். 1983ஆம் ஆண்டுக்குப்பின்னர் தீவுப் பகுதியில் பல குடியிருப்புகள் சேதமடைந்தன பலர் தொழிலிழந்தனர்.

இப்படியான பாதிப்புக்கள், இழப்புக்கள் விண்ணப்பங்கள் மூலம் கிராம சேவகர்கள் ஊடாக வேலை உதவி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு மேலாகிவிட்டது. இதுவரை பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணக் கொடுப்பனவுகளோ அல்லது நிவாரணத்துக்கான புனர் வாழ்வுச் சான்றிதழ்களோ உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்படவில்லை.

என்ன காரணங்களுக்காக நிவாரண வேலைகள் இழுத்தடிக்கப்பட்டு தாமதிக்கப்பட்டு வருகின்றன? இதனை ஒட்டி வட மாநில அரசாங்க அதிபர் கவனத்துக்கெடுத்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்வாரா?

எஸ். செல்வராசா,
புங்குடுதீவு.

### முல்லைத்தீவில் குப்பை கூளம்

முல்லைத்தீவுப் பட்டணத்தில் உள்ள வீதி ஓரங்கள், பொது இடங்கள், அலுவலகச் சுற்றுப்புறங்கள், பொதுச் சந்தை போன்ற இடங்களில் குப்பை கூழங்கள் அகற்றப் படாமல்தேங்கிக் கிடக்கின்றன. இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இக் குப்பை கூழங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக தேங்கிக் கிடப்பதாக முல்லைத்தீவு பொதுச் சுகாதார உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் சுட்டிக்காட்டாக இருப்பது குறிப்பாக பொதுமக்கள் ஒன்றுகூடும் இடமாகிய முல்லைத்தீவுபொது சந்தையின் பின்புறம் பெரிய தோர் குப்பைமேடாகவே காட்சியளிக்கின்றது. துர்நாற்றம் சகிக்க முடியாததாக இருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை எடுப்பார்களா?

யோ. ரத்தினம்
மாங்குளம்.

### பல் வைத்தியர்

முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களாகப் பல் வைத்தியர் இல்லாமையால் பல் நோயாளிகள் வவுனியா அல்லது வேறு இடங்களுக்குக் கஷ்டத்தின் மத்தியில் பிரயாணம் மேற்கொள்கின்றார்கள். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுப்பார்களா?

— எம். கே. யோகா
முல்லைத்தீவு.

## கண்டதும் கேட்டதும்

இலங்கையைப் பொறுத்தமட்டில் மக்கள் இடம் பெயர்வது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சியாக மாறி வருகிறது. 1958 இனக்கலவரத்துடன் இந்த இடம் பெயர்வு ஆரம்பமானது.

பல்வேறு கட்டங்களிலும் பல்வேறு காரணங்களாலும் வடக்கிலோ தெற்கிலோ இது இன்னும் தொடர்கதை தான்.

ஆனால் தற்போது வவுனியாப் பகுதியில் மக்கள் இடம் பெயர்வதற்கு காட்டு யானைகள் காரணமாக இருக்கின்றனவாம்.

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர்ச்சியான கடும் வரட்சியே இதற்குக் காரணம். குடிப்பதற்குத் தண்ணீர் இன்றி காட்டு யானைகள் ஊர்மனைகளுக்குள் படை எடுத்து வருகின்றன.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பெரிய குளம் குடியேற்றத் திட்டத்தில் 1977 இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட 53 மலையகக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டிருந்தன. யானைகளின் அட்டகாசம் இந்தக் குடும்பங்களையும் குடிபெயரும் நிலைக்குள் தள்ளி விட்டது.

தென் இலங்கை ஏற்காத நிலையில் தமிழ் மண்ணை நாடி வந்தவர்கள் இந்த மக்கள்.

— இனி இவர்கள் எங்கே போவது?

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறுவிலை

சபையின் கற்பகங்கள் மூலம் விற்பனை செய்வதற்கு பின்வரும் பொருட்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன;

1. நல்லெண்ணெய்
2. வேப்பம் பூ வடகம்
3. ஊறுகாய்
4. இடியப்ப உரல்
5. பலகார உரல்
6. கொழுக்கட்டை உரல்
7. சயிட்ச பலகார உரல்

கூறுவிலைகளை பின்வரும் விலாசத்திற்கு 22-09-89க்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்; தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலைகளுக்கான விணப்பம் என்று குறிப்பிடவும்;

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
47, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
[8-3342]


# மீன்பிடித் தொழில் விருத்திக்கு அரசாங்கம் உதவி

முல்லைத்தீவு, செப் 17

அரசாங்கம் மீனவர்களுக்கு மீன்பிடித்தொழிலை விருத்தி செய்ய ஊக்கமளிக்கிறது; மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீனவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய கடற்றொழில் திணைக்களமும் முன்வந்துள்ளது;

முல்லைத்தீவு கோயிற் குடியிருப்புக் கிராம மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தபோது முல்லை மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு; ஏ: யோசப் இவ்வாறு கூறினார்;

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு. யோசேப் பாக்கியராஜா, உபதலைவர் திரு; ச: பாலகிருஷ்ணன், செயலாளர் திரு: அ: அன்ரனி அமலன், பொருளாளர் திரு: கொ. ஸ்ரீபன். (க.92)

# குளங்களை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

திருகோணமலை மாவட்டத்தில் 22 கிராமிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்;

இந்தத் திட்டத்துக்கு 27 லட்சம் ரூபா செலவாகும்;

இந்தத் திட்டம் பூர்த்தி அடைந்ததும் 1620 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும்; (த)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்:
1935-05-14

இறைவன் அடியில்:
1989 08-18

### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் மிருசுவில் - உசன்)

திங்களொன்று ஓடி மறைந்ததைபா
திசையற்ற படகாகிப் போனோமே இங்கு
பொங்கும் புன்னகையும் பூரிப்பும் புகழுரையும்
தங்குமிடந் தானெங்கும் தணலாய்ச் சுடுகிறதே
எங்குமிங்கு மோடிக் காலனுக் கேங்கும்
கங்கையெனக் கதறுகிறோம் கண்ணீரில் மூழ்கி
தாங்குதற்கே இதயமிது தானாது மாழ்வதற்கோ
நீருகிப் போம்வரை யும்நினைவில் நாமிருப்போம்;

17-09 89 ஞாயிற்றுக்கிழமையன்று கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 18-09 89 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

'காசிவில்லா'
வலுவத்தை,
தெல்லிப்பழை கிழக்கு தெல்லிப்பழை:

மனைவி, பிள்ளைகள்.
(2180)


## மக்கள் முகம்

### காரைநகர் ப. நோ. கூ. ச நெறியாள் குழு

யாழ்ப்பாணம், செப்: 17

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான நெறியாள் குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: திரு: சு; சிவஞானம், உபதலைவர்: திரு: சி: ரத்தினகோபால், உறுப்பினர்கள்: திரு: மு: ஐ: கந்தசாமி, திரு: எ. வி. நடராசா, திரு: என்: சிற்றம்பலம், திரு: மு: கிருஷ்ணபிள்ளை, திரு: கா; சோமசுந்தரம் ஆகியோர்; (க)

### பாடசாலை அபிவிருத்தி சங்கம்

யாழ்ப்பாணம், செப்: 17

ஆனப்பந்தி மெ: மி. தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்;

தலைவர் இ: தங்கராஜா (அதிபர்) உபதலைவர்: திரு; ச; கைலாயபிள்ளை, செயலாளர்: திரு:ஏ; என் தியாகராஜா, பொருளாளர்: திருமதி பி: அன்ரனி (ஆசிரியை) மேலும் பதினொருபேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்; (க)

# இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் செல்வோர் பயங்கரவாதிகள் என அறிவிப்பு

கொழும்பு, செப்: 17

இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் பயணம் செய்பவர்கள் பயங்கரவாதிகளாக கணிக்கும்படி பொலீஸ் மற்றும் பாதுகாப்புப்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு: ரஞ்சன் விஜேரத்தின செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்;

இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் இராணுவ சீருடையிலான பல குழுக்கள் சென்று கடத்தல் மற்றும் கொலைகளில் ஈடுபட்டு வருகின்றன என்று குற்றம் சாட்டப்படுவதைத் தொடர்ந்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்;

இராணுவப் பொலீஸ் கப்டன் பெரேரா என்பவரை சுட்டுக் கொன்றதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே மொரட்டுவ சொய்சாபுர மாடியில் வசித்து வந்த ஆறு பேர் கொல்லப்பட்டு அவர்களது சடலங்கள் எரிக்கப்பட்டன என்றும் அமைச்சர் சொன்னார்;

விடுமுறையில் சென்று இப்படியான கொலைகளைச் செய்து விட்டு மீண்டும் சேவைக்குத் திரும்பியதாகக் கூறப்படும் ஐந்து பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர் என்றும் அமைச்சர் சொன்னார்; (இ-எ)

# உலக வங்கி, நாணய சபை குறித்து பிரதமர் பிரதான உரை

## ஜமெய்க்கா மாநாட்டில்

கொழும்பு செப்: 17

ஜமெய்க்காவில் நடைபெறும் காமான்வெல்த் நிதியமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு: டி; பி. விஜேதுங்கா இன்று ஞாயிற்றுக்கிழமை லண்டன் பயணமாகிறார்; அங்கிருந்து அவர் ஜமெய்க்கா செல்வார்;

உலக வங்கி: சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் செயற்பாடு, நிலைப்பாடு, காமென்வெல்த் நாடுகளிற்கு அவற்றின் உதவி என்பவற்றைத் தொழிற் பொருளாகக் கொண்ட பிரதான உரையை திரு. விஜேதுங்காவே மாநாட்டில் நிகழ்த்த உள்ளார்;

அதன் பின்னர் வாஷிங்டனில் நடக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றுடன் ஆளுநர் சபைக் கூட்டங்களில் பிரதமர் விஜேதுங்கா கலந்து கொண்டு ஆலோசனை நடத்துவார்; (அ)

#### அரச கூட்டுத்தாபனங்களில் நிலவும்

# நிர்வாகச் சீர்கேடுகளை விசாரிக்க உயர்குழு நியமிக்க வேண்டும்

## தொழிற்சங்க சம்மேளனக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், செப்: 17

அரசு, தனியார் கூட்டுத்தாபனங்களில் இன்று நிலவும் ஊழல், லஞ்சம், நிர்வாகச் சீர்கேடு என்பவற்றுக்கெதிராக உயர்விசாரணைக் குழு ஒன்று அமைத்து விசாரணைகள் மேற்கொள்வது அவசியமாகும்;

ஈழத்தொழிற்சங்க சம்மேளனத்தின் அமைப்பாளர் திரு: வி. ஏ; கந்தசாமி மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தச்சு வேலைப் பயிற்சிப் பாடசாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராமியத் தொழிலாளர் அமைப்பு, கிராமியப் பெண்கள் அமைப்பு என்பன இணைந்து நடத்திய இந்தக் கூட்டத்திற்கு திரு: அ. இலட்சுமணன் தலைமை வகித்தார்:

திரு: வி: ஏ; கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வரும் அதே சமயம் விலைவாசிகள் 'ரொக்கட்' வேகத்தில் உயர்ந்து வருவதால் வாழ்க்கைச் செலவு கட்டுப்பாடற்ற முறையில் அதிகரித்து வருகின்றது; அரச நிர்வாகத்திலும் கூட்டுத்தாபனங்களிலும் ஊழல், லஞ்சம், மோசடி என்பது மலிந்துவிட்டன;

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளமையால் அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளமாக ரூபா 2500 வழங்க வேண்டியது இன்றைய உடனடித் தேவையாகும்:

தொழிலாளி வர்க்கத்தின் சம்பள ... விலை உயர்ந்துவரும் இவ்வாறு ... கும் ஏற்ற வகையில் சம்பள உயர்வைப் பெறவும் தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றிடவும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தையும் தமிழர்களின் நலன்களையும் பேணிப் பாதுகாக்கும் பொருட்டுமே ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கப்பட்டது;

எமது சம்மேளனம் இதுவரை யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் தொழில்களுக்கு ஏற்ற வகையில் தொழிற்சங்கங்களை அமைத்து, அவற்றை எமது சம்மேளனத்துடன் இணைத்து தொழிலாளர் வர்க்கத்தின் விடிவுக்காகப் போராடி வருகின்றோம்; தொழிலாளி வர்க்கம் தனது விடிவை நோக்கிச் செல்லும் பாதையில் சகலரையும் ஐக்கியப்படுத்தி முன்னேற வேண்டும் என்றார்;

இக்கூட்டத்தி வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு: எஸ்; புஸ்பராசா அவர்களும் உரை நிகழ்த்தினார்;

### காப்புறுதி


கொழும்பு, செப் 17

பாதுகாப்புப்படையினர், பொலீஸார் ஆகியோரின் வீடுகள் காப்புறுதி செய்யப்படவுள்ளன;

பிரீமியம் பணத்தை அரசாங்கமே காப்புறுதிக்கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தும்;

தீவிரவாதிகளால் பாதுகாப்புப் படையினரின் வீடுகள் எரிக்கப்பட்டு வருகின்றன; அதைத்தொடர்ந்து கடந்த புதன்கிழமை அமைச்சரவை இந்த முடிவை எடுத்தது;


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
### சகாதேவன் செல்வகுமார் (கீதன்)

(நல்லூர் முடமாவடிச்சந்தி கீதன் குட்டி மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் நிலைய உரிமையாளரும் விற்பனையாளரும்)

பிறப்பு: 09 — 11 — 1967
இறப்பு: 29 — 09 — 1988

அன்னாரின் அந்தியேட்டியும் ஆண்டுத் திதியும் 18-09-89 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்:

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்;

அ; சகாதேவன்
குடும்பத்தார்

இராமலிங்கம் ரோட்.
நல்லூர் வடக்கு. நல்லூர்: [2187]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
### கதிர்காமசேகரம் சதீஸ்வரன்
(விக்ரம்)

மலர்வு: 14 - 9 - 1985
உதிர்வு: 18 - 8 - 1989

வான்முழு மதிபோல வளர்ந்து வந்த சதீஸ்வரா!
மண்ணகத்தில் நின் பெருமைகளை நாம் காணுமுன்பு
விண்ணகத்தில் மகத்துவம் படைக்கத்தான் சென்றாயோ!
செல்ல மொழி கேட்டு மெல்ல நகைத்திருந்தோம்
செல்லும் வழி சொல்லாது ஏன்தான் சென்றாயோ;
காலமெல்லாம் எம்மை மகிழ்விப்பாய் என்றிருந்தோம்
காலனின் கண்பட்டு கானல் நீரானாயோ!
நம் கண்ணீரைச் சடலாக்கி காற்றில் நீ கலந்தாலும்
எம் மனக்கண்முன் எப்போதும் வாழ்ந்திருப்பாய்
-சதீஸ்வரா

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா,
சகோதரிகள், உறவினர்கள்.

(2838)

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினை பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 18 - 09 - 1989 [திங்கள், புதன், வெள்ளி]

பயிற்சிக் காலம்: 3 மாதம்

சேரும் போது செலுத்த வேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம்; குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்; தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்;

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்;

விண்ணப்ப முடிவுத் திகதி: 17-09-1989




UNIKCO COMPUTER CENTRE
No: 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)
(C/0566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியாச் சென் யுத்த முனையில் இந்திய படையை விரட்டும் வல்லமை இருப்பதாக பாக். அறிவிப்பு

## திடீர்த்தாக்குதல் நடத்தும் திறமை—தளபதி அஸ்லம்பெக் தகவல்

இஸ்லாமபாத், செப் 16
சியாச்சென் யுத்த முனையில் இருந்து இந்தியாவை பின்வாங்கச் செய்யும் வல்லமை பாகிஸ்தானுக்கு உண்டு என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ராவல்பிண்டியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பாகிஸ்தான் இராணுவத்தின் பிரதம தளபதி மேர்ஸா அஸ்லம் பெக் முன்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

சியாச்சென் யுத்த களத்தில் இருந்து இந்தியத் துருப்புக்களை விரட்டியடிக்கும் வல்லமை எம் படையினருக்கு உண்டு.

அப்படிச் செய்வதனால் ஏற்படுவதனால் விளையும் தாக்கத்தை நாம் ஏற்கத் தயாரா என்பது முதலில் தீர்மானிக்கப்பட வேண்டும். இரு நாடுகளும் முழு அளவிலான யுத்தம் ஒன்றில் கலந்து கொள்ளும் நிலைமை கூட ஏற்படலாம்.

எதிரி மீது திடீர்த் தாக்குதல் நடத்தும் வல்லமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது. தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் கொடுத்து வந்த நிலையில் இப்போது நாம் இல்லை.

எதிரிக்கு நாம் விடுக்கும் செய்தி இதுதான்; அர்த்தமுள்ள தயாரிப்பு நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம் என்பதே அது.

எதிரி எம்மீது வாலாட்டினால், தகுந்த பதில் மட்டும் அல்ல, மூக்குடைபடும் அளவுக்கு எமது பதில் நடவடிக்கை அமையும்.

எமது எண்ணம் யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பது அல்ல; அதைத் தடுப்பதே.

இப்படி பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஸ்லம்பெக் சொன்னார்.

இதேவேளை — 600 கிலோ மீற்றர் பறந்து சென்று தாக்கும் ஏவுகணைத் தயாரிக்கும் திட்டத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதாக தளபதி அஸ்லம்பெக் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக வெளிநாடுகளின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

ஏவுகணை வளர்ச்சியில் இந்தியா முன்னணி வகிக்கிறது. இந்தியாவின் எல்லைப் புறத்தில் இருந்து 300 முதல் 350 கிலோ மீற்றர் வலயத்தினுள் தான் பாகிஸ்தான் உள்ளது. ஆகவே இந்தியா தான் தயாரித்துள்ள 2 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் செல்லும் ஏவுகணையை எமக்கு எதிராக பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் உளவியல் ரீதியில் சாதகமான நிலையை மட்டுமே அது இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இப்படி பாகிஸ்தான் தளபதி அஸ்லம்பெக் சொன்னார். (எ)

## ● சியாச்சென் பற்றிய இந்தியாவின் வீடியோபடம் பாகிஸ்தானுக்கு கடத்தல்

இந்திய பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் உள்ள சியாச்சென் யுத்த முனையின் கேந்திர நிலையங்கள் பற்றிய வீடியோபடம் தூரதர்ஷனின் ஸ்ரீநகர் நிலையத்தில் இருந்து காணமற்போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த வீடியோ படம் பாகிஸ்தான் டெலிவிஷனில் ஒளிபரப்பப்பட்டதா என்பது தெரியவில்லை என்று இந்திய தகவல் அமைச்சுச் செயலாளர் பி முராரி சொன்னார்.

20 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த வீடியோப் படத்தில் சியாச்சென் யுத்தமுனையில் இந்தியத் துருப்புக்கள் நிலை கொண்டுள்ள இடங்கள் மற்றும் கேந்திர ஸ்தாபனங்கள் உள்ளன.

இப்படம் காணமற்போன சம்பவம் குறித்து பூரணவிசாரணை நடத்தும்படி தகவல் அமைச்சுக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## கடலிலிருந்த கப்பலில் தங்கம்

நியூயோர்க், செப்: 16
132 ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கிய கப்பல் ஒன்றில் இருந்து 100 கோடி டாலர் பெறுமதியான தங்கம் கண்டெடுக்கப்பட்டது.

1857 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் இருந்து சான்பிரான்ஸிஸ்கோ சென்று கொண்டிருந்தபோது இக்கப்பல் கரோலினா நகரில் இருந்து 200 மைல் தொலைவில் கடலில் மூழ்கியது. (அ-எ)

## அமெரிக்க முயற்சிக்கு ஆப்கன் வரவேற்பு

காபூல் செப் 16
ஆப்கன் மோதலுக்கு முடிவு காண முன்னாள் மன்னர் ஸஹிர்ஷாவின் உதவியை நாடுவதற்கு அமெரிக்கா முடிவு செய்வதை ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா வரவேற்றிருக்கின்றார்.

பதினொரு வருடகால சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா எடுக்கும் சாதகமான முடிவு இது என்று டாக்டர் நஜிப் வர்ணித்திருக்கின்றார்.

ஆப்கனில் அமைதி திரும்ப இராணுவ நடவடிக்கை உதவாது என்ற முடிவுக்கு வாஷிங்டன் வந்துவிட்டது என்பதை இது காட்டுவதாகவும் ஆப்கன் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ)

## போலந்தில் புதிய அரசியல் கட்சி அமைக்க முயற்சி

வார்ஸோ செப்: 16
போலந்தில் புலிய இடதுசாரி சீர்திருத்தக் கட்சியொன்றை அமைக்கும் அவசியத்தை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ரக்கோவ்ஸ்கி வலியுறுத்தி இருக்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள சீர் திருத்தவாதிகள் வெளியேறி புதிய கட்சியை அமைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருக்கிறார். (எ)

## 18பேர் பலி

லெபனான் தலைநகர் பேரூட்டில் முஸ்லிம் கிறிஸ்தவப் படைகளுக்கு இடையே மீண்டும் ஏற்பட்ட மோதலில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

எழுபதுக்கு அதிகமானோர் காயமடைந்தனர். (ம)


## கப்பலில் வேலைவாய்ப்புகள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு

1. Second Officer
2. Third Officer
3. Second Engineer
4. Third Engineer
5. Radio Officer
6. Bosan
7. A. B.
8. Oiler

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

முகவரி:

**NATIONAL SHIPPING & TRAVELS**

New Lalitha Building
185/2, Kasthuriar Road, Jaffna.

[3602]


## ACKNOWLEDGEMENT

Mrs Pavalam Swampilai and Children thank all those who attended the funeral of the late Mr. C. F. Swampilai, sent messages of condolences, wreaths and helped in various other ways. We regret inability to thank them individually.

71, 4th Cross Street,
**Jaffna.**

[2373]

முதலமைச்சர் கருணாநிதிக்கு

# கறுப்புக் கொடிக்குப் பதில் காகம் பறக்கவிடும் திட்டம் முறியடிப்பு!

திருநெல்வேலி செப் 16
முதலமைச்சர் கருணாநிதியின் கார் அணிவகுப்பு ஊர்வலம் செல்லும்போது காகங்களைப் பறக்கவிட முயற்சித்ததாகக் கூறப்படும் 65 காங்கிரஸ் தொண்டர்களை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைது செய்தனர்.

கோபால சமுத்திரம் என்ற இடத்தில் நடந்த அரசு வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு திருநெல்வேலிக்கு கருணாநிதி திரும்பிக்கொண்டு இருந்தார்.

கருணாநிதியின் கார் அணிவகுப்பு திருநெல்வேலி சந்தியூடாக வந்துகொண்டிருந்த சமயம் சுமார் 150 காங்கிரஸ் தொண்டர்கள் காகங்களைப் பறக்கவிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கக் காத்திருந்தனர்.

கறுப்புக்கொடி காட்டுவதற்கு பதிலாக காகம் பறக்கவிடும் ஏற்பாட்டை நடத்துவதே காங்கிரஸாரின் திட்டம்.

ஆனால் பொலிஸார் கார் அணிவகுப்பு அந்த இடத்திற்கு வருவதற்கு முன்னர் காத்து நின்ற காங்கிரஸாரை கைது செய்தனர்.

இதனால் காகம் பறக்கவிடும் திட்டம் முறியடிக்கப்பட்டது. (எ)

# கி. ஜேர்மன் ஜனாதிபதி மரணம்? மே. ஜேர்மன் நாளிதழ் தகவல்

பொன், செப்: 1
கிழக்கு ஜேர்மன் ஜனாதிபதி எரிச் ஹொனெக்கர் இறந்துவிட்டார் என்று மேற்கு ஜேர்மன் நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேற்குலக உளவுச் சேவை அதிகாரிகள் மூலமாக இத்தகவல் கிடைத்ததாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

77 வயதான திரு. ஹொனெக்கர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார்.

புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்வரை இவரின் இறப்பு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## இந்திய - நேபாள பேச்சுக்கள்

புதுடில்லி, செப்: 16
இந்தியாவும் நேபாளமும் உத்தியோக பூர்வமான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க உள்ளன.

பெல்கிரேடில் ராஜீவ் — பிரேந்திரா ஆகியோருக்கு இடையேயான பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. (எ)

# ரஷ்யாவில் ‘விசித்திர மனிதன்:’ பொது மக்கள் பயந்து ஓட்டம்!

மாஸ்கோ, செப்டம்பர் 16
ரஷ்யா வோல்கா பிராந்தியத்தில் உள்ள கிரோவர் பகுதியில் நீண்ட கை, கால்களுடன் ரோமங்கள் அடர்ந்த உருவம் ஒன்று காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆட்களைக் கண்டதும் அந்த உருவம் மின்னல் வேகத்தில் மறைந்துவிடுகிறதாம். இது அந்தப் பகுதி மக்களுக்கு ஒரே புதிராக இருக்கிறது. அவர்கள் வியப்பும் பீதியும் அடைந்துள்ளனர்.

இந்த விசித்திர உருவத்தைக் குளக்கரை ஒன்றில் தாமும் தமது நண்பரும் கண்டதாக கால்நடை மருத்துவர் ஆர். செய்தோவ் என்பவர் கூறியுள்ளதாக ‘டாஸ்’ செய்தி தெரிவித்துள்ளது.

அந்த உருவத்தின் அருகே செல்ல முயன்றபோது அது வயல்வெளியில் பாய்ந்து ஓடி புதர்களுக்குள் மறைந்துவிடுவதாக அவர் தெரிவித்தார்.

அந்த உருவத்தை நான் நன்றாகப் பார்த்தேன். அது மனித உருவத்தைப்போல் இல்லவே இல்லை; சுமார் 2 மீட்டர் உயரம்கொண்ட அந்த உருவம் வேகமாக எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் 2 மீற்றர் நீளம் கொண்டது. அதன் உடல்முழுவதும் அடர்த்தியான பழுப்புநிற ரோமம் காணப்பட்டது. தோள்வரை முடி தொங்கியது என்றும் அவர் சொன்னார்.

அந்த உருவத்தைத் தாமும், தமது நண்பரும் சுமார் 1000 மீற்றர் துரத்திச் சென்றதாகவும், அது மனிதனோ, மனிதக்குரங்கோ அல்ல என்பது நிச்சயம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவத்துக்குச் சற்றுப் பின்னர் இந்த இடத்தில் [illegible] ஒருவர் அந்த உருவத்தின் காலடிகளைப் படம் எடுத்துள்ளார்.

அவ்வளவு பெரிய உருவத்துக்குப் பொருந்தாதவகையில் காலடி சிறிதாக இருப்பதாக அவர் சொன்னார். (எ-)


அர்ச்சுனா



கல்வி — முயற்சி — பெருவாழ்வு
சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டில் மலரும் ஒரேயொரு சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் அர்ச்சுனா

40 பக்கங்கள்

சிறுவர்க்கு பொழுது போக்குடன் அறிவுக்கு உசாத் துணையாக அமைவது அர்ச்சுனா

- சிறுகதை, கவிதை
- அறிவுலக அறிமுகம்
- பிறமொழிக் கதைகள்
- விளையாட்டரங்கு
- நகைச்சுவை
- சித்திரத்தொடர்
- கணிதப் புதிர்

இன்னும் பல அம்சங்கள்..

தமிழ் வாசகர் கரங்களில் மிக மலிவு விலையில் தவழும் ஒரேயொரு சிறுவர் சஞ்சிகை அர்ச்சுனா

சிறுவர் இலக்கிய அறிஞர்கள் ஆர்வலர்களின் படைப்புக்களையும் சிறுவர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது அர்ச்சுனா

விலை - 5/= ஆண்டுச்சந்தா - 70/=

தபாலில் பெற விரும்புவோர் இத் தொகைக்குக் காசுக்கட்டளை / காசோலை பெற்று, திரு உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி உதயன், த.பெ.எண் - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு :

யாழ்ப்பாணத்தில் :
'அர்ச்சுனா' பணிமனை
2ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பில் :
முகாமையாளர்
எஸ்.ரீ.சி டீம்,
61, பௌத்தலோக மாவத்தை, [illegible]

உதயன் - சஞ்சீவி வெளியீடுகள்


## கண்ணீரஞ்சலி



### திரு. நவரத்தினம் கிருஷ்ணமூர்த்தி
(மூர்த்தி அண்ணா, சின்ராசா)

தோற்றம்: 30 - 07 - 1950
மறைவு: 11 - 09 - 1989

கட்டுவன் தெற்கு ஏழாலையை வதிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் கிரிமலை சமநலசேவை கட்டுவன் பகுதி விவசாய உத்தியோகத்தரும், தற்போதைய வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமசேவையாளரும், முன்னாள் கட்டுவன் கிராமோதய சபைத் தலைவரும், கட்டுவன் தெற்கு பாரதி சன சமூக நிலையத் தலைவரும், பாரதி நாடக மன்ற சிறந்த முன்னணி நடிகரும், கட்டுவன் தெற்கு முனியப்பர் ஆலய புனரமைப்புத் தொண்டரும் — தலை சிறந்த அரசியல்வாதியுமான கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 11 - 09 - 1989 திங்கள் பிற்பகல் 2.15 மணியளவில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மகனும், திருமதி சின்னம்மாவின் அருமை மகனும், திருமதி கிருபாலச்சந்திரேஸ்வரியின் அன்புக் கணவரும் (ஜெயந்தி அக்கா), திருமதி ஆ. சின்னத்தங்கத்தின் மருமகனும், திருமதி மனோரஞ்சிதமலர் (முன்னாள் தாதிய உத்தியோகஸ்தர் அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழை, ஆயுர்வேத வைத்தியசாலை கைதடி), பேரின்பமலர், செல்வமணி, செல்வராசா, (அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழை), பேரின்பமூர்த்தி (வியாபாரி சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. கி. குகராஜா (மாவட்ட கூட்டுறவு அதிகாரி, கூட்டுறவுக் காரியாலயம் திருகோணமலை), திரு. ஆ. சிங்கராஜா (சவூதி அரேபியா), திருமதி செ. நாகபூரணி, திரு. பே. பவளராணி, அமரர் அருமைநாயகம் (உள்நாட்டு இறைவரி, மதிப்பீட்டாளர், திரு. அன்னலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சந்திரஸ்ரீ ரஜனி, குகரஞ்சனி, நளினி, ராஜதர்ஷினி, தனேந்திரன், தனுசியா, பிரசாந், சுரேஷ், ஜீவதான் டெய்சி, றெஜினா ஆகியோரின் மாமனாரும், ரகுநாத், சங்கீதா, ஜசிந்தா, பிரியதர்ஷினி ஆகியோரின் சித்தப்பாவும், டிபேந்திரா, ஜிதேந்திரா எழில்வேந்தன் ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

உலக சரித்திரங்களை அளவலாவிய உங்களுக்கு
ஏன் உங்கள் சரித்திரம் முடியப்போவது தெரியவில்லை?
கனவிலும், நினைவிலும்
நமது மக்கள், நமது கிராமம் என்பீர்களே!
அந்தக் கிராமமும், மக்களும் அளித்த பரிசு இதுதானோ?
கனவிலும், நினைவிலும்
தமிழ் ஈழம், தமிழ் மண் என்பீர்களே!
அந்தப் பற்றுக்கும் உணர்வுக்கும் பரிசு இதுதானோ?
நெஞ்சம் மறக்குமோ? நினைவு அகலுமோ?

மனைவி, தாயார்,
சகோதர சகோதரிகள்.

பாலகிருஷ்ணா இல்லம்,
ஏழாலை வடக்கு
ஏழாலை.

(3195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்,
பல் கட்டுபவரும்!



P. I. பர்ணண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

17 · 09 · 1989 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுபவரும்,
கண்ணாடி தருபவரும்!



இலை:
P. I. பர்ணண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.


## பயிலுநர் ஆசிரியர் பதவி: எழுத்துப் பரீட்சை திகதியை பணிப்பாளர்கள் தீர்மானிப்பர்

யாழ்ப்பாணம், செப் 17

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப்பரீட்சை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பின்னரே நடத்தப்படும். அதற்கான திகதிகளை அந்தந்த மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களே தீர்மானிப்பர்.

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பிரதேச போட்டிப் பரீட்சை நேற்று நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

அதன் பிரகாரம் தென்னிலங்கையில் பல மாவட்டங்களில் பரீட்சை நடைபெற்றது. சில மாவட்டங்களில் பரீட்சையை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்றுப் பரீட்சையை நடத்த முடியாத இடங்களில் இன்னொரு திகதியில் நடத்தும் அதிகாரம் அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பயிலுநர் ஆசிரியர் பதவிகளுக்கு நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் சுமார் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 25 ஆயிரம் பேரை நியமிக்க முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பிந்திய முடிவின் பிரகாரம் மொத்தம் 35 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (அ-9)

### கூட்டம்

கொழும்புத்துறை, செப் 17

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு இயக்க அலுவலகத்தில் தலைவர் சட்டத்தரணி திரு பொன் பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறும். (க-80)

## எடை குறைந்த பாண் விற்போருக்கு தண்டனை வழங்க சட்டதிருத்தம்

கொழும்பு, செப். 17

பாண், பணிஸ் மற்றும் கோதுமைப் பண்டங்களை சுகாதாரமற்ற முறையிலும் நிறை குறைவாகவும் தயாரிக்கும் பேக்கரிச் சொந்தக்காரர்களுக்கும், அவற்றை விற்பனை செய்பவர்களுக்கும் கடும் தண்டனை விதிக்க வேண்டும் எனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

உணவு மற்றும் கொள்கைத் திட்டமிடல் சம்பந்தப்பட்ட தேசியக் குழு அரசாங்கத்துக்கு இந்தச் சிபாரிசினை வழங்கி உள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும் பாண் மற்றும் பணிஸ் போன்ற கோதுமை மாப் பண்டங்கள் எடை குறைத்துத் தயாரிக்கப்படுவதும்—

இவை மனித பாவனைக்கு ஒவ்வாத விதத்தில் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படுவதும்—

வர்த்தக அமைச்சு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

மிகக்குறிப்பாக நகரங்களில் இந்த மோசடிகள் அதிகமாக நடப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வினைத் தொடர்ந்து இவ்விவகாரம் உணவு மற்றும் கொள்கைத் திட்டமிடல் சம்பந்தப்பட்ட தேசியக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

குறைந்த எடை, சுகாதாரமற்ற உணவுப் பண்டங்களைத் தயாரிப்பவர்களுக்கான தண்டனைகளை கடுமையாக்க வேண்டும் எனவும்—

அவ்வாறான தயாரிப்புகளை விற்பவர்களுக்கும், தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும்—தேசியக் குழு அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்துள்ளது.

இப்போதுள்ள சட்ட விதிகளை அதற்கேற்ற விதத்தில் திருத்த வேண்டும் என்றும் தேசியக் குழு சிபாரிசு செய்துள்ளது. (அ)

### சுட உத்தரவு

போதைக் கடத்தலில் ஈடுபடும் விமானங்களை சுட்டு வீழ்த்தும்படி விமானப் படையினருக்கு கொலம்பிய அரசு நேற்று உத்தரவிட்டது.

இதற்காக ஆயுதங்களுடன் இரண்டு விமானங்களை தயார் நிலையில் வைத்திருப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

## சம்பள அதிகரிப்பு பாக்கி அடுத்த மாதம் கிடைக்கும்

கொழும்பு, செப். 17

போக்குவரத்துச் சபை ஊழியருக்கு 1982 முதல் வழங்கப்படவேண்டிய சம்பள அதிகரிப்புக்களின் பாக்கிப்பணம் அடுத்த மாதம் முதல் வழங்கப்படும் என்று துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

1982 ஜனவரி முதல் இந்த ஊழியருக்கு மாதாந்தம் 45 ரூபா வீதம் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது வழங்கப்படாததால் கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி முதல் ஜூலை 12ஆம் திகதி வரை போக்குவரத்துச் சபை ஊழியர் வேலைநிறுத்தம் செய்து வந்தமை தெரிந்ததே.

இச்சம்பள அதிகரிப்பை வழங்க அரசு முன்வந்ததைத் தொடர்ந்தே, வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

பாக்கிப் பணம் அடுத்த மாதம் முதல் மூன்று கட்டங்களாக வழங்கப்படும் என்று திரு. செல்லச்சாமி தெரிவித்தார். (உ-எ)

### முகாம் நீக்கம்

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு — பொலநறுவை வீதியில் புனானை ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்த இந்தியப் படை முகாம் அகற்றப்பட்டுவிட்டது. (அ-21)

## எம்.பி. மாருக்கே சிறந்த பென்ஷன் திட்டம்

### 5 வருட சேவைக்கு ரூபா 3,000

கொழும்பு, செப். 17

இலங்கையில் அமுலில் இருக்கும் சிறந்ததோர் பென்ஷன் திட்டம் எம். பி மார்களுக்கான பென்ஷன் திட்டமாகும்.

எப்படியோ ஐந்து ஆண்டுகள் எம். பி.யாக பணிபுரிந்து விட்டால் மாதம் ஒன்றிற்கு 3 ஆயிரம் ரூபா பென்ஷனை கிடைக்கும் — இவ்வாறு சுதந்திரக் கட்சி எம். பி நிச்சரிட் பத்திரான தெரிவித்தார்.

ரத்மம அரசாங்க சேவை ஓய்வூதியர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் திரு. பத்திரான மேற்கண்டவாறு சொன்னார். [உ-எ]

## ரூ 1 கோடி பெறுமதியான மிளகாய் எரிந்து நாசம்!

பொலன்னறுவ, ஹிங்குராங்கொட ஆகிய இடங்களில் உள்ள இரண்டு களஞ்சியங்கள் அண்மையில் இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இக்களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடியே 5 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான செத்தல் மிளகாய் எரிந்து நாசமானது.

இந்த இரண்டு களஞ்சியங்களும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமானவையாகும். (உ-எ)

## தாதிகளுக்கு சம்பளமற்ற லீவு

கொழும்பு, செப். 17

வெளிநாடு சென்று வேலை செய்வதற்காக ஆஸ்பத்திரி தாதிகளுக்கு ஐந்துவருட சம்பளம் அற்றலீவு வழங்க சுகாதார அமைச்சு முன்வந்துள்ளது.

அமைச்சு அதிகாரிகளுக்கும் அரசாங்க தாதிமார் சங்கத்திற்கும் இடையே வார இறுதியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

## பிரிமா மா ஏற்றிவருவதற்கு புதிதாக இரு கப்பல்கள்!

கொழும்பு, செப். 17

திருகோணமலையில் இருந்து பிரிமா மாவை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச் செல்வதற்காக இரண்டு கப்பல்களை வாங்குவதற்கு வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் தீர்மானித்திருக்கிறார்.

அடுத்த வாரம் முதல் இக் கப்பல்கள் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் கப்பல் மூலம் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மா அனுப்பப்படுவது இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. (உ-எ)

## நீர்வேலி சம்பவம் குறித்து ஈ.என்.டி.எல்.எப். அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

நீர்வேலிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை குழு ஒன்றுடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்ததாகவும்—

எதிர்த்தரப்பில் 12 பேருக்கு மேல் கொல்லப்பட்டதாகவும், பலருக்குக் காயம் ஏற்பட்டதாகவும்—

ஈ. என். டி. எல். எவ். நேற்று யாழ்ப்பாணத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த தங்கள் இயக்க உறுப்பினர்களான காண்டீபன் (ரமேஷ் — குருநகர்), சூரி (பாலசூரியர் — கிளிநொச்சி) ஜெனி (டொமினிக் — குருநகர்) ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தி இந்த அறிக்கையை ஈ. என். டி. எல். எவ். விடுத்திருந்தது. (உ)

## உருத்திரபுர வாசி மரணம்

யாழ்ப்பாணம், செப். 17

கடந்த 13-ம் திகதி உருத்திரபுரம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மரணமானவர் உருத்திரபுர வாசியான கே. கதிரவேலு (வயது 59) என்பவர் ஆவார். (அ-9)

## மலையகத் தமிழரின் பாதுகாப்பில்லாத நிலை

கொழும்பு, செப். 17

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள், பிரமுகர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொள்ளும் தாக்குதல்களினால் மலையகத் தமிழர்களிடையே பீதி நிலவுகிறது.

இத் தாக்குதல்களுக்கு பின்னணியாக செயற்படும் சக்தி எது என்பது புரியாமல் மலையகத் தமிழ் வட்டாரங்களில் அங்கலாய்ப்பு நிலவுகிறது.

இதுவரை இ. தொ. கா. பிரமுகர்கள் மூவர் உட்பட பத்துப்பேர் வரைசுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மலையக மக்களிடையே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உருவாகியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (அ-21)

## திருமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முடிவு!

கொழும்பு, செப் 17

கொள்கலன்களை ஏற்றவும் இறக்கவும் கூடிய சர்வதேச துறைமுகமாக திருகோணமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்.

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறார்.

"ஒரு துறைமுகத்தில் வேலைகள் ஸ்தம்பிதமடைந்தால் மற்ற துறைமுகத்திலேனும் சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையிலேயே திருகோணமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது" - என்றார் அமைச்சர். [உ-எ]

## சம்பள முற்பணக் கடனுக இதுவரைரூ.1கோடி98லட்சம்

### மட்டு. கல்வி அலுவலகம் வழங்கியது

மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு மாவட்டக் கல்வி அலுவலகம் ஆசிரியர்கள் உட்பட சகல ஊழியர்களுக்கும் இதுவரை சம்பள முற்பணம் கடனாக 1 கோடியே 98 லட்சத்து 45 ஆயிரத்து 460 ரூபாவை வழங்கியுள்ளது.

இத் தகவலை மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

இதுவரை மொத்தம் 290 பேருக்கு முற்பணக் கடன் வழங்கப்பட்டிருப்பதாகவும்—

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை மேற் குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டதாகவும்—

முற்பணக் கடன் வழங்குவதற்காக கல்வி அமைச்சிடமிருந்து மேலும் நிதி கோரப்பட்டுள்ளதாகவும்—

பணம் கிடைத்தவுடன் இதுவரை வழங்கப்படாதவர்களுக்கு பிரதானதாபகடன் கொடுக்கப்படும் — எனவும் திரு. சோமசுந்தரம் மேலும் தெரிவித்தார். (அ-21)

## இம்மாத ஓய்வூதியம் இவ்வாரம் கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், செப். 17

செப்டம்பர் மாதத்திற்கான ஓய்வூதிய 'வவுச்சர்கள்' இந்த வாரத்தில் யாழ். செயலகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் ஓய்வூதியத்திற்கான பணமும் திறைசேரியில் இருந்து இவ்வாரத்திலேயே அனுப்பிவைக்கப்படலாம் என செயலக வட்டாரங்கள் நம்பிக்கைகொண்டுள்ளன.

ஓய்வூதிய 'வவுச்சர்களும்' பணமும் வந்து சேர்ந்தால் இவ்வாரத்திலேயே ஓய்வூதியத்திற்கான காசோலைகள் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும், உடனடியாகவே அவை வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-9)

## தென்பகுதிச் சம்பவங்கள்

கொழும்பு, செப். 17

தென்பகுதியில் நேற்றுவரை இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

★ பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது சுமார் 200 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ பிலியந்தலையில் நடந்த மோதல் ஒன்றில் சந்தேக நபர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ அனுராதபுரம் மாவட்டத்தில் பொலிஸ் ரோந்துக் குழு ஒன்றை தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கினர். அப்போது இடம்பெற்ற மோதலில் ஒரு சந்தேக நபர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ திரப்பான என்ற இடத்திலும் பாதுகாப்புப் படையினர் ஒரு சந்தேக நபரைச் சுட்டுக்கொன்றனர்.

★ ... பட்டது. (உ-எ)

### ஒருதொகுதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதி மாணவர்களை பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் முன் நிறுத்துவார்கள் என்றும் —

அடுத்தடுத்த நாட்களில் ஏனைய அமைப்புக்கள் தங்களுடன் தங்கியிருக்கும் மாணவர்களைப்பெற்றோர் அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் முன் நிறுத்துவார்கள் என்றும் அவர் மேலும் சொன்னார். (அ-உ)

## மரண அறிவித்தல்

### திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி

அரியாலை புறாடி முன் ஒழுங்கையில் வசித்தவராகிய திரு. வ. சின்னத்தம்பி 16-09-89 இல் சிவபதம் அடைந்து விட்டார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி நேசமலர் (யாழ் போதனா வைத்தியசாலை), கணேசதாசன் (சவுதி அரேபியா), திருமதி கமலாம்பிகை (குவைத்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராஜா (புகையிரதப்பகுதி), திருமதி இராஜேஸ்வரி, மாசிலாமணி (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பீஷ்மன், அரவிந்தன், கௌரிபாலன் (யாழ். பரியோவான் கல்லூரி) ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார். இறுதிக் கிரியைகள் 18-09-89 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. தேவராஜா

5, புறாடி முன் ஒழுங்கை
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(2197)

### திருமதி மேரி யோசப்பின் யோசப் (இரத்தினம் அக்கா)

திருமதி மேரியோசப்பின் யோசப் (இரத்தினம் அக்கா) காலமானார்.

இவர் காலஞ்சென்ற W. F. யோசப் (விக்லி) இன் அன்பு மனைவியும், திரு. J. A. X. பிரான்சிஸ் (செல்வம்) - [புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை], திரு. A. B. பிரான்சிஸ் [பொன்ராசா - ஜேர்மனி], திருமதி ஹெலன் மனுவல் (வனஜா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அலோசியா, பரிமளம், மனுவல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தங்கராணி இராஜவரோதயத்தின் (ஆசிரியை, யா/புனித யோசப் வித்தியாலயம்) அன்புச் சகோதரியும், திரு. பேனுட் இராஜவரோதயத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18-09-1989 நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J. A. X. பிரான்சிஸ்

27/14, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

[1951]

+

### திருமதி இசபெல் கோமர்-வன்னியசிங்கம்

திருமதி இசபெல் கோமர் - வன்னியசிங்கம் அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. அல்பிரெட் கோமர் - வன்னியசிங்கம் அவர்களின் அருமை மனைவியும், சுமித்திரா, பாலா, சித்திரா, Dr. நிமால், யோகா (தெயபலாங்கே - அசோசியேற்ஸ்), சந்திரன் (பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், றவி வணிகசூரியர், பிறின்சஸ், எஸ். எச்ஸ். ஞானசேகரம் (கணக்காளர், யாழ். சுகாதார சேவைத் திணைக்களம்), பிறிடா, அஞ்ஜோ ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற வழக்கறிஞர் ஜே. ஏ. பி. செறுபிம் அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17-09-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3-15 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

''செறுபிம் ஹவுஸ்''
இல. 100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[C/3345]


லொறிகள் உடன் விற்பனைக்கு

26/27 ஸ்ரீ இசுசு லொறிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
அலுவலக நேரங்களில்;

பெட்டா எசன்ஸ் சப்ளையேர்ஸ்
223, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

(2356)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org